OS. 100/2022

நாள். 05.02.2026

வா.சா.1 – ரங்கராஜன்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

நான் என்ன பரிகாரங்கள் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்துக்களில் சமபாகம் பங்கு கேட்டுள்ளேன். மொத்தம் எத்தனை இலக்க சொத்துக்களுக்கு வழக்கு போட்டுள்ளேன் என்றால் 11 அயிட்ட சொத்துக்கள். 1ம் இலக்க சொத்தில்தான் பிரதிவாதி நடத்திவரும் அருணா ஸ்டோர்ஸ் உள்ளது என்றால் சரிதான். 1ம் இலக்க சொத்திற்குரிய கிரையப்பத்திரம் யார்யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரிலும், பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் உள்ளது. 2ம் இலக்க சொத்து யார்வசம் அனுபவத்தில் உள்ளது என்றால் என்வசம். 3ம் இலக்க சொத்து யார் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் பிரதிவாதி வசித்து வருகிறார். 3ம் இலக்க சொத்திற்கான கிரையப்பத்திரம் என் பெயரிலும், பிரதிவாதியின் தகப்பனார் பெயரிலும் கூட்டாக உள்ளது. 4ம் இலக்க சொத்து யார்வசம் உள்ளது என்றால் பிரதிவாதிவசம். 4ம் இலக்க சொத்து பிரதிவாதியின் தாயார்பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான், ஆனால் அந்த சொத்தை நானும், பிரதிவாதியின் தகப்பனாரும் சேர்ந்து பிரதிவாதியின் தாயார் பெயரில் வாங்கினோம். 4ம் இலக்க சொத்தைப் பொருத்து பிரதிவாதியின் தாயார் பெயரில் கிரையம் பெறப்பட்ட கிரைய பத்திரத்தில் அருணா ஸ்டோரில் வந்த வருமானத்தை வைத்து வாங்கியதாக வாசகம் இல்லை என்றும், பிரதிவாதியின் தாயாரின் பணத்தை கொண்டு வாங்கப்பட்டதாக வாசகம் உள்ளது என்றால் சரிதான், ஆனால் அவ்வாறு வாங்கப்படவில்லை. பிரதிவாதியின் தாயார் பெயரில் கிரையம் பெறப்பட்ட கிரையப்பத்திரத்தில் கண்டுள்ள வாசகத்தை பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் 1984ம் ஆண்டு கிரையம் பெறப்பட்டபோதே தெரியும். 4ம் இலக்க சொத்தை பொறுத்து பிரதிவாதியின் தாயார் பெயரில் கிரையம் பெறப்பட்ட கிரைய ஆவணம் வா.சா.ஆ.6 என்றால் சரிதான்.

வா.சா.ஆ.6ல் சொல்லப்பட்டுள்ள பிரதிவாதியின் தாயார் பணத்தை கொண்டு வாங்கப்பட்டது என கூறியுள்ளது தவறு, அருணா ஸ்டோரிலிருநது கிடைத்த பொது வருமானத்தை வைத்து வாங்கப்பட்டது என அந்த ஆவணத்தில் வாசகங்களை சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். 4ம் இலக்க சொத்தில் பிரதிவாதி குடோன் வைத்துள்ளரா அல்லது கடை வைத்துள்ளரா என்றால் முதலில் குடோன் வைத்திருந்தார் தற்போது கடை வைத்துள்ளார். 4ம் இலக்க சொத்திற்கு வடக்கே உள்ள கோமதி லாட்ஜ்–ஐ பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 4ம் இலக்க சொத்தி பிரதிவாதியின் தாயார் பெயரில் உள்ளது என்றபோதிலும், அவரது தாயாரை நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால், இவ்வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்கவில்லை என்ற காரணத்திற்காக தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. 5ம் இலக்க சொத்துக்கு யார் பெயரில் கிரைய பத்திரம் உள்ளது என்றால் என் பெயரிலும், பிரதிவாதி பெயரிலும் உள்ளது. 5ம் இலக்க சொத்தில் எப்போது கட்டிடம் கட்டப்பட்டது என்றால் 2000ம் ஆண்டு. 5ம் இலக்க சொத்தில் உள்ள கட்டிடம் யார்வசம் உள்ளது என்றால் என்வசம் உள்ளது. 6ம் இலக்க சொத்து யார்பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால், என் அப்பா வேணுகோபால் செட்டியார் பெயரிலும், என் பெரியப்பா மகன் கோவிந்தராஜன் செட்டியார் பெயரிலும் கிரையம் பெறப்பட்டது. தாவா 6ம் இலக்க சொத்து யார் அனுபவத்தில்இருந்து வருகிறது என்றால் என் அனுபவத்தில் உள்ளது. 6ம் இலக்க சொத்தில் ஒருபகுதி வீடாகவும், மற்றொரு பகுதி குடோனாகவும் உள்ளது என்றால் ஒருபகுதி வீடாகவும்,மற்றொரு பகுதி பயன்படுத்தப்படாமல் இருந்து வருகிறது. என் தகப்பனாருக்கு நானும், சகோதரி சந்தான லெட்சுமியும் வாரிசுகள். என் பெரியப்பா மகன் கோவிந்தராஜனுக்கு 4 பிள்ளைகள். 1 ஆண், 3 பெண்கள். என் சகோதரி சந்தான லெட்சுமியையும், பிரதிவாதியின் சகோதரிகள் மூவருக்கும் தாவா சொத்துகளில் உரிமைஉள்ளது என்றும், அவர்களும் இவ்வழக்கில் அவசிய தரப்பினர்கள் என்றும், அவர்களை தரப்பினர்களை சேர்க்கவில்லை என்பதால், இவ்வழக்கு அவசிய தரப்பினர்கள்

சேர்க்காத காரணத்திற்காக தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. தாவா 7ம் இலக்க சொத்துக்கு யார்பெயரில் கிரையப்பத்திரங்கள் உள்ளது என்றால் மொத்த விஸ்தீரணம் 52 சென்டில் 26 சென்டுக்கு என் பெயரிலும், மற்றொரு 26 சென்டுக்கு பிரதிவாதி பெயரிலும் உள்ளது. அந்த சொத்து காலியிடம் என்றால் சரிதான். தாவா 8ம் இலக்க சொத்து யார் பெயரில் கிரையப்பத்திரம் உள்ளது என்றால் என்பெயரிலும், பிரதிவாதி பெயரிலும் உள்ளது. அந்த சொத்தும் காலியிடமாக உள்ளது என்றால் சரிதான். 9ம் இலக்க சொத்து என் பெயரிலும், பிரதிவாதி பெயரிலும் கிரையப்பத்திரம் இருந்து வருகிறது. அந்த சொத்து தற்போது கட்டிடமாகத்தான் உள்ளது என்றால் சரிதான். அதுயார்வசம் உள்ளது என்றால் என்வசம் உள்ளது, அந்த கட்டிடத்தை எதற்காக பயன்படுத்தி வருகிறேன் என்றால், என் கடையுடன் சேர்ந்த பின்பகுதியாக பயன்படுத்தி வருகிறேன். தாவா 10ம் இலக்க சொத்து என் பெயரிலும், பிரதிவாதி பெயரிலும் கிரையப்பத்திரம் இருந்து வருகிறது. தாவா 10ம் இலக்க சொத்தில் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் சுற்றுசுவருடன் ஒரு செட் போடப்பட்டிருந்தது, அதை பிரதிவாதி இடித்துவிட்டார், தற்போது காலியிடமாக உள்ளது. நான் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் பிராதில் தாவா 10ம் இலக்க சொத்து காலியிடமாகத்தான் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். தாவா 11ம் இலக்க சொத்து யார் பெயரில் கிரையப்பத்திரம் இருந்து வருகிறது என்றால் என் பெயரிலும், பிரதிவாதி பெயரிலும். தாவா 11ம் இலக்க சொத்தில் பாதிபகுதியில் நான் கட்டுமானம்கட்டி பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரிதான். 11ம்இலக்க சொத்தில் நான் போட்டுள்ள தகரசெட்டை எந்த வருடம் போட்டேன் என்றால் 2012ம் ஆண்டு. என்னுடைய பிராதில் தாவா 11ம் இலக்க சொத்தை காலியிடமாகத்தான் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். தாவா 11ம் இலக்க சொத்தில் மற்றொரு பகுதியில் பிரதிவாதி கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு நான் ஏற்கனவே தாவா 11ம் இலக்க சொத்தில் ஒரு பகுதியில் கட்டுமானம் கட்டிய நிலையில் மற்றொரு பகுதியில் பிரதிவாதி கட்டுமானம் கட்டக்கூடாது என இடைக்காலதடைஉத்தரவு கேட்டு

மனு செய்தேன் என்றால் சரிதான், ஆனால் அந்த சொத்து பிரிக்கப்படவில்லை. தாவா 11 இலக்க சொத்துக்களில் 9 இலக்க சொத்துக்களில் ஏற்கனவே கட்டுமானம் உள்ளநிலையில் புதிதாக பிரதிவாதி கட்டுமானம் கட்டப்போவதாக பொய்யான விவரங்கள்கோரி தடையுறுத்துகட்டளைகோரி மனுதாக்கல் செய்திருந்தேன் என்றால் சரியல்ல. 13.08.2018ம் தேதி எழுதப்பட்ட உறுதிமொழிஆவணத்தை (வா.சா.ஆ.25) எங்கு வைத்து, யாரால் எழுதப்பட்டது என்றால் என் வீட்டில் வைத்து, இரு குடும்பத்தார்கள் முன்னிலையில் எழுதப்பட்டது. தாவா 11 இலக்க சொத்துக்களையும் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் வாங்கியுள்ள நிலையில் வா.சா.ஆ.25 ஆவணத்தை மட்டும் ஏன் பதிவு செய்யவில்லை என்றால் 3 நாட்களுக்குள் கிரைய ஆவணம் எழுதிக்கொள்வதாக பிரதிவாதிகள் தரப்பில் தெரிவித்ததால் பதிவு செய்யவில்லை. நான் தாவா வழக்கை தாக்கல் செய்யும்போது வா.சா.ஆ–25ன் படி செய்து கொண்ட உடன்படிக்கையை பிரதிவாதி நிரவேற்றத்தரக்கோரி ஏற்றதைஆற்றுக பரிகாரம்கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.25 ஆவண உடன்படிக்கையின்படி எனக்கு ஒதுக்கப்ட்டதாக சொல்லப்படும் 6 இலக்க சொத்துக்கள் மற்றும் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லப்படும் 7 இலக்க சொத்துக்களின் மதிப்பு சுமார் ரூ.75 கோடி இருக்கும் என்றால் சரியல்ல, அதன் மதிப்பு ரூ.5 கோடி இருக்கும். நான் தற்போது ஒப்புக்கொண்டுள்ளபடி வா.சா.ஆ.25 ஆவணத்திற்கு முத்திரைத்தாள்கள் ரூ.15 இலட்சம் செலுத்த வேண்டியிருக்கும் என்றும், நாங்கள் அரசுக்கு செலுத்தவேண்டிய முத்திரை தீர்வை ஏமாற்றியுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.25 ஐ பொறுத்து நான் கோரியுள்ள செயலுத்துகட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், அதை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.25 என்னால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றும், அதில் உள்ள கையெழுத்து பிரதிவாதியினுடையது அல்ல என்றும், பிரதிவாதி கையெழுத்து செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் உண்மை விவரங்களை மறைத்தும்,

சரியான விவரங்களை கூறி வழக்கு தாக்கல் செய்யாததால் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.